1972 மார்ச் 18]

திரு. எஸ். வடிவேல் : சீர்காழி தாலூகாவில் பனங்காட்டாங் குடி பாலத்தை அகலப்படுத்துகிற திட்டம் முதல் அமைச்சர் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தபோது போடப்பட்ட திட்டம். அது இதுவரை நிறைவேற்றப்படாமல் பஸ் போக்குவரத் திற்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. மக்களும் கஷ்டப்படு கிறார்கள். ஆகவே அதை துரிதமாக நிறைவேற்றி வைப்பதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உறுப்பினர் அவர்கள் சொல்கிற இந்தப் பாலத்திற்கு மிக அருகாமையில் 3¼ இலட்சம் ரூபாய் செலவில் புதுமனியாற்றின் குறுக்கே பனங்காட் டான்குடியில் ஒரு பாலம் அமைக்க வேலைகள் துவங்கப்பட்டு முடிவு அடையும் தருவாயில் இருக்கிறது. அந்தப் பால வேலை முடிந்தால் இந்தப் பாலத்தை அகலப்படுத்த வேண்டிய நிலை ஏற்படாது என்று நினைக்கிறேன். இருந்தாலும் இதைப் பரிசீலித்து நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

* 564 வினா.—திரு. க. நாகராஜன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்—சிலுவத்தூர் சாலையில் ராஜக்காபட்டி அருகே சந்தானவர்த்தினி ஆற்றின் மீது பாலம் ஒன்று அமைக்க செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) திண்டுக்கல்—சிலுவத்தூர் சாலையில் (அரசு "இதர மாவட்ட" சாலை) 11/2 கிலோ மீட்டரில் சந்தானவர்த்தினி ஆற்றின் குறுக்கே ரூ. 10 இலட்சம் செலவில் பாலம் ஒன்று கட்டும் வேலை நான்காவது ஐந்தாண்டு வரைவு திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக் கிறது.

வேப்பந்தட்டைக்கு புதிய ஏரி

* 565 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் வட்டம், வேப்பந்தட்டையில் புதிதாக ஏரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?